சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்

O.S. No.89/2016

2025–ம் ஆண்டு ஜூலை மாதம் 15–ஆம் நாள் பி.சா.1 சாட்சி திரு.ஜவகர் என் முன் சாட்சியாக விசாரிக்கப்படுபவர். 1969ம் ஆண்டு 24வது சட்டப்பிரிவு 4(1) ஏற்பாட்டின்படி உயர்திரு.கே.எஸ்.ஷபீனா, பி.ஏ., பி.எல்., சார்பு நீதிபதி, சத்தியமங்கலம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு.ஜவகர் | தொழில் | : |
| த/பெ | : சாமியப்ப முதலியார் | கிராமம் | : வரதம்பாளையம் |
| வயது | : | தாலுக்கா | : சத்தியமங்கலம் |

பி.சா.1 : முதல் விசாரணை:

நான் இவ்வழக்கில் 4ம் பிரதிவாதி ஆவேன். என் தரப்பில் சாட்சியமாக விசாரணை செய்ய பிரமாணவாக்குமூல பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி பிரமாணப்பத்திரிக்கையில் கண்டுள்ள சங்கதிகளை அறிவேன். எனது நிரூபண வாக்குமூலத்தை முதல் விசாரணையாக ஏற்ககோருகிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான்.

ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.

25.11.2008ம் தேதியிட்ட 4, 6, 7 பிரதிவாதிகள் ஏற்படுத்திக்கொண்ட பாகப்பிரிவினைப் பத்திரம் பதிவு நகல் பி.சா.ஆ.1 ஆகவும், 13.07.2007ம் தேதியிட்ட நிறைவேற்று மனு எண்.41/2008ன் நகல் சார்வு செய்யப்பட்ட நகல் பி.சா.ஆ.2 ஆகவும், 24.06.2011ம் தேதியிட்ட வாதிகள் நிறைவேற்று மனு எண்.41/2008ல் தாக்கல் செய்த

எதிர் மனுவுரை சான்று நகல் பி.சா.ஆ.3 ஆகவும், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி சேமிப்பு கணக்கு புத்தகம் அசல் பி.சா.ஆ.4 ஆகவும், 07.04.2014ம் தேதியிட்ட கந்தாய ரசீது அசல் பி.சா.ஆ.5 ஆகவும், 06.01.2022ம் தேதியிட்ட பேங்க் ஆப் இந்தியா வங்கியில் 4ம் பிரதிவாதியின் மகன் தீபக் குமார் அடமானக்கடன் பெற்றதற்கான வங்கியின் பதிவு வங்கியில் வழங்கியது பி.சா.ஆ.6 ஆகவும், 14.01.2008ம் தேதியிட்ட 4ம் பிரதிவாதி, 7ம் பிரதிவாதி வெங்கடேஸ்வரிக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட செட்டில்மெண்ட் பத்திரம் சான்று நகல் பி.சா.ஆ.7 ஆகவும், 06.12.2021ம் தேதியிட்ட டவுன் சர்வே பதிவு சான்று இணையதள நகல் பி.சா.ஆ.8 ஆகவும், 23.01.2021ம் தேதியிட்ட பட்டா மாறுதல் உத்தரவு இணையதள நகல் பி.சா.ஆ.9 ஆகவும், 22.08.2015ம் தேதியிட்ட மனைவரி தோராயப் பட்டா அசல் பி.சா.ஆ.10 ஆகவும், 22.08.2015ம் தேதியிட்ட மனைவரி தோராயப்பட்டா அசல் பி.சா.ஆ.11 ஆகவும், 06.07.2020ம் தேதியிட்ட 4ம் பிரதிவாதி அவரது மகன் தீபக் குமாருக்கு எழுதி வைத்த தான செட்டில்மெண்ட் பத்திரம் இணையதள நகல் பி.சா.ஆ.12 ஆகவும், 16.08.1996ம் தேதியிட்ட 4ம் பிரதிவாதிக்கு செய்து கொடுத்த ஒப்பந்த பத்திரம் அசல் பி.சா.ஆ.13 ஆகவும், 27.08.1996ம் தேதியிட்ட 4, 5ம் பிரதிவாதிகளுக்கு தாயார் ராஜம்மாள் எழுதிக்கொடுத்த உயில் சாசனம் சான்று நகல் பி.சா.ஆ.14 ஆகவும் ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது (பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.14 வரையிலான ஆவணங்கள் வாதி தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டு ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது). மேற்படி ஆவணங்களின் பரிசீலனையில் தாவாவை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் என்னால் அழைக்கப்பட்டு சாட்சியிடம் படித்து விளக்கமளித்து, அவர் சரியானவை என்று ஒப்புக் கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.